Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Culture in Tamil Literature

**Dr. R. Anusiya**, Assistant Professor, Department of Tamil,
Sadakathullah Appa College, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-2172-7295
DOI: 10.5281/zenodo.6619201

## Abstract

*It is an accepted view today that literature is the product of culture. The principle that literature reflects culture is strong among researchers. The first works of Tamil literature are from the Sangam period literary works such as "Ettuthokai" "Pathupattu" which is categorized as "Pathinenmelkkanakku Noolkal". It records the cultural records of the Tamil people and culture. This article elicits about the glimpses of Tamil culture and its heritage in Tamil literature.*

**Keywords:** Literature, Culture, *Patthupattu*, *Eattuthogai*, Sangam.

## References

[1] Patthuppattu Moolamum Uraium. Kazhaga Veliyeedu.
[2] *Silappathikaram* - Manikkavasagan Urai.
[3] *Kambaramayanam* – Kambar.
[4] *The Mahabharata*.
[5] *Thirukkural* - Thiruvalluvar – Preface.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் பண்பாடு

**முனைவர் இரா. அனுசியா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ்அப்பாகல்லூரி, திருநெல்வேலி. தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2172-7295**
**DOI: 10.5281/zenodo.6619201**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது பண்பாட்டின் உற்பத்திப் பொருள் என்பது பண்பாட்டின் உற்பத்திப் பொருள் என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது. இலக்கியம் பண்பாட்டைக் பிரதிபலிக்கிறது என்ற கொள்கை ஆய்வாளர்களிடம் வலுவாக உள்ளது. தமிழ் இலக்கியங்கள் என்ற படைப்பில் முதலாவதாக சங்க கால இலக்கியங்களான "பத்துப்பாட்டு", "எட்டுத்தொகை" "பதினெண் மேல்கணக்கு", நூல்களில் பண்பாடு குறித்த பதிவுகளை முதலில் பதிவு செய்து கொண்டு ஏனைய தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள பண்பாட்டுப் பதிவுகள் விளக்கப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** இலக்கியம், பண்பாடு, *பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,* சங்கம்.

**முன்னுரை**

பண்பாட்டில் உள்ள அனைத்து கூறுகளும் ஏதேனும் ஒரு செயல்பாட்டைக் கொண்டுள்ளன. இலக்கியம் என்பது பண்பாட்டின் உற்பத்திப் பொருள் என்பது பண்பாட்டின் உற்பத்திப் பொருள் என்பது இன்று ஏற்றுக்கொள்ளப் பட்டகருத்தாக உள்ளது. இலக்கியம் பண்பாட்டைக் பிரதிபலிக்கிறது என்ற கொள்கை ஆய்வாளர்களிடம் வலுவாக உள்ளது. தமிழ் இலக்கியங்கள் என்ற படைப்பில் முதலாவதாக சங்ககால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பண்பாடு குறித்த பதிவுகளை முதலில் பதிவுசெய்து கொண்டு ஏனைய தமிழ் இலக்கியநூல்களில் உள்ள பண்பாட்டுப் பதிவுகள் விளக்கப்பட்டுள்ளன.

**பத்துப்பாட்டில்பண்பாடுகுறித்தபதிவுகள்**

பொது நிலையில் எல்லா அரசர்களும் குறுநில மன்னர்களும் கலைஞர்கள் தங்களைக் காணவரும் போது அவர்களுக்குப் புத்தாடை வழங்கி, அவர்களின் தாழ்வு மனப்பான்மையை நீக்கி, அவர்களுடன் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மேலும் அவர்களின் களைப்பைப் போக்க மயக்கம் தராத, களைப்பைப் போக்கும் சுவைநீரைக் கொடுத்தனர் என்பதை பொருநர்ஆற்றுப்படையில் 84, 88, 152, 155 ஆகியபாடல்கள் வழியாகவும் சிறுபாணாற்றுப்படையில் 235, 236 ஆகிய பாடல்கள் வழியாகவும் மலைபடுகடாமில் 560, 562 ஆகிய பாடல்கள் வழியாகவும் கூறப் பெற்றுள்ளமையை நாம் காணலாம்.

இன்று ஆதினங்களுக்குப் புலவர்கள் செல்லும் போது பொன்னாடை போர்த்தி வரவேற்கும் பண்பழைய சங்ககால மரபின் அடிப்படையில் தொடர்வதாகவும், பழங்காலத்தில் அறிவுடைய புலவர்களை அரசர்கள் மதித்தனர் என்பதை புறநானூறு 183 இல்மூத்தோன் வருக என்னாது அறிவுடையோன், ஆறு, அரசும் செல்லும் என்றும் இவ்வாறு எல்லா அரசுகளும் குறுநிலமன்னர்களும் முதலில் செய்தனர் (சி.ஆ. 235 – 237, பொ.ஆ.468, 470, மலை 561, 563) கலைஞர்களுக்கு புரவலர்கள்

யானையையும் குதிரையையும், தேனும் கொடுத்தும் பொன்மாலைகள் அணிவித்தும் அவர்களை வழி அனுப்பும் போது அவர்களுக்குப் பின் ஏழு அடி சென்று வழி அனுப்பியும் அவர்களுக்குத் தேவையான உணவுகளையும் கொடுத்து அனுப்பியுள்ளனர். வணிகர்கள் நடுநிலையோடு சிறந்த பண்பாட்டோடு வாழ்ந்தனர் என்பது (ப.பா.206-212) மூலம் அறிய முடிகிறது. குறிஞ்சிப்பாட்டு தமிழ் பண்பாட்டை உணர்த்துவதற்குப் பாடப்பெற்று தமிழ்ப்பண்பாடாகிய சான்றாண்மை பெருந்தன்மை குறையாமல் நடந்துகொள்ள (கு.பா.13-18) பண்பாட்டின் அடிப்படையில் பல கருத்துக்கள் பத்துப்பாட்டில் உள்ளன.

**உணவு**

தமிழர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்து இவைகள் எதைச் சார்ந்து என அடையாளம் காட்டப்பட்டு அங்கு வாழும் மக்களின் உணவு எவை என்பதை குறிஞ்சிநில உணவு தினைச்சோறு நெய்யில் வெந்த இறைச்சி (மலை 168-169) முல்லைநில உணவு தினையரிசிச் சோற்றையும் வரகரசித் சோற்றையும் அவரைப் பருப்பு கலந்த கும்மாயம் (பொ.ஆ.167, 168, 192, 195), (மலை. 434, 436, 440, 445) மருதநில உணவு கரும்பும் நெல்லும் கொடுத்து மானின் தசைகள் பெற்றுக்கொள்கின்றனர். (பொ.ஆ.216, 217) ஒய்ய நாட்டு மருதநிலத்தார் வெண்சோற்றையும், நண்டும் பீர்க்கங்காய் கலந்த கூட்டு (சி.ஆ.193 – 195) தொண்டை நாட்டு மருதநிலத்தில் பழையசோறு, அவல் (பெ.ஆ.223-226) தொண்டை நாட்டு மருதநிலத்தார் நெல்சோற்றைப் பெட்டைக்கோழி பொரியலோடு உண்டனர். (பெ.ஆ.251-256) அந்நாட்டுத் தோப்பில் வாழும் மருதநில உழவர் சோற்றொடு பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளி கிழங்கு போன்றவற்றையும் சேர்த்து உண்டனர்.(பொ.ஆ.356-366).

நெய்தல் நில உணவு கடலில் பெற்ற இறால் மீனையும் வயல் ஆமையும், பக்குவம் செய்து உண்டனர். (ப.பா.63, 64) பனங்கள்ளைக் குடித்தனர் (ப.பா. 89) நெல் அரிசிகள் பருகினர் (ப.பா.93) ஒய்மாநாட்டு நெய்தல் நிலத்தார்கள், சூட்டு இறைச்சி உண்டனர். (சி.ஆ.156-163) பன்றியின் இறைச்சியைச் சமைத்து உண்டனர் (பெ.ஆ.339-345) பாலைநில உணவு ஒய்மனாட்டு பாலைநிலமக்கள் புளிக்கறி இடப்பட்ட சோறு, ஆமை சூட்டு இறைச்சி உண்டனர் (சி.ஆ.175-177) தொண்டை நாட்டு பாலை நில மக்கள் புல்அரசி, உப்பு காண்டம் சேர்த்து உண்டனர் (பெ.ஆ.95-100) ஈச்சங்கொட்டை நெல்அரசி உடும்பு பொரியலையும் உண்டனர் (பெ.ஆ.130-133).

**உடை**

சங்ககாலத்தில் தழை ஆடை உடுத்தும் மரபு இருந்தது. (கு.பா.102-104, முருகு 201-205, ப.பா.91), கரிகாலன் பொருநர்க்கு இழைநூல் போன வழிகாண இயலாத நுண்மையான ஆடையை நல்கினான் என்பதை (பொ.ஆ.82-83) திருமுருகாற்றுப்படையில் குறமகள் தழையாடை உடுத்தியது (முருக 201-205, பா.பா.91) பரதவசேரிப் பெண்டிர் தழையாடை உடுத்தியிருந்ததை கூறுகிறது. உயர்ந்த ஆடை வகைகள் தமிழகத்தில் செய்யப் பெற்றன என்பதை பத்துப்பாட்டு உணர்த்துகின்றது. கரிகாலன் புலவர்களுக்கு வேலைபாடுடைய நுண்மையான ஆடையும், அரவுரி போன்ற ஆடையும் நல்கினான் என்றும் (பொ.ஆ.82, 83, 155) பேசுகிறார்கள். நல்லிக்கோடன் பாணர்க்கு மூங்கில் குழாய்க்குள் இருக்கின்ற மெல்லிய நளிபொருந்திய தகடு போன்ற ஆடையை தருகிறான் என்பதைக் (சி.ஆ.236) கூறுகிறது. தொண்டைமான் இளந்திரையன் பாணர்க்குப் பாலாவி நூலால் செய்த ஆடையைத் தருகிறான் என்பதைக் (பெ.ஆ.469) கூறுகிறது. நன்னன் கூத்தர்க்கு இழைபோன இடம் அறிய இயலாத நுண்ணிய நூலால் செய்த கலிங்கத்தை அளிக்கிறான் என்பதைக் (மாலை. 561) கூறுகிறது. அக்காலத்தில் சட்டையும் அணிந்திருந்தனர். இதை முல்லைப்பாட்டுத் தொடர் (66) பிற்காலத்தில் சட்டையை

மெய்ப்பை என்று கூறினர். இதை (மு.பா.60,61), முருகு 138, 184) போன்ற பகுதிகள் ஆடையைக் குறிக்கின்றன. துகில், அறுவை, கலிங்கம், காழகம் போன்ற சொற்கள் ஆடையைக் குறித்தன மதுரைக்காஞ்சி 729, நெடுநெல்வாடை 145 ஆம் ஆடையைப் பற்றி குறிப்பிட்டுள்ளன.

**அணிகலன்கள் – ஆபரணங்கள்**

சமுதாயத்தின் நாகரிகத்தையும் வளர்ச்சியையும் காட்டுவன அணிகலன்கள் குழை, தோடு, காழ், மேகலை பற்றிய செய்தியும் பழங்காலத்தில் அணி, பூண், இழை, கலம் என்பது பற்றிய செய்தியும், ஓசை கேட்கும் அணியைகலன் என்றும், கைகளிலும் தோள்களிலும் தொடுக்கப் பெறுவதை தொடி என அழைத்தனர். தாமம், மகுடம், பதுமம், கோடகம், இம்புரி என ஐந்து தலைமுடி ஆபரணங்கள் பற்றி (முருகு 83-84, தொல் 1571-3, சிலம்பு 16-114) எனக் கூறுவதும் இங்கு நினைக்கத்தக்கது. தலை ஆபரணம் பற்றி (முருக 23-25, பெ.ஆ.485-486) காதணி பற்றி (முருக 86, பொ.ஆ.30) கழுத்தணி பற்றி (பொ.ஆ.89) இதனையே இலை வேய் குரம்பை உழை அதன் பள்ளி (ம.கா.310) என ஆசிரியரும் உறுதிப்படுத்துகிறார்.

முல்லை நிலமக்கள் வரகுத் தட்டைகளே குழல்களில் கூரையாக்கியும் ஆட்டுக்கிடாயின் தோல்களை படுக்கைகளாக்கியும் வாழ்கின்றனர் (பெ.ஆ.147-154) மருத நிலமக்கள் வைக்கோலால் வேய்ந்த குடிலை அமைத்திருந்தனர். தென்னை ஓலைகள் வேய்ந்த வீடுகளும் இருந்தன. வேழக்கோரையை தாழைநாரால் கட்டுதருப்பைப் புல்லால் வேயப்பட்ட தாழ்ந்த இறப்பை உடைய குடில்களிலும் வாழ்ந்தனர். நெய்தல் நிலமக்கள் தாழ்ந்தகூரைகளைக் கொண்ட குடில்களில் வாழ்ந்தனர்.

**தொழில்கள்**

குறிஞ்சி நிலமக்கள் நெல், எள், தினை, அவரை, வரகு, மூங்கில், வெண்சிறு கடுகு, கிழங்கு, கவலைக்கிழங்கு, மலைவாழை, மா, பலா, போன்றவற்றை பயிரிட்டனர். தேன் எடுத்தனர். வேட்டையாடினர். முல்லை நிலமக்கள் சாமை, வரகு, தினை, எள், போன்ற தானியங்களை விதைத்தனர். ஆடு, மாடுகளை வளர்த்தனர். மருத நிலமக்கள் உழுதனர், நெல் விதைத்தனர். பயிர்தொழிலுக்குத் தொடர்பான செயல்களைச் செய்தனர். நெய்தல் நிலமக்கள் மீன்பிடித்தல், உப்புவிளை வித்தனர். பாலை நிலமக்கள் பிற நிலங்களில் இருந்த பசுக்கூட்டத்தைக் கவர்ந்தனர். வழிப்பறி செய்தனர்.

**சங்கஇலக்கியத்தில்இரும்புப்பண்பாடு**

இரும்பு என்பதற்கு பிங்கலநிகண்டு கருங்கொல், அகி, கருந்தாது, அயல், அயம் (1942) ஆகிய ஐந்து பெயர்கள் உள்ளன எனக் குறிப்பிடுகின்றது. சூடாமணி (424), திவாகரம் (1043) ஆகிய நிகண்டுகளிலும் இப்பெயர்கள் பதிவாகியுள்ளனர். சங்கஇலக்கியங்களில் இரும்பு என்ற சொல்லாட்சி அகம். 4-3, 26-7, 56-3, 72-6, 81-5, 90-11, 172-6, கலி.64-21, சிறு.193 நற்.133-9, 194-9, நெடு. 42-80, பரி 7-58, புற.21-8, 150-25, 170-15, 180-4, 209-1, பெரு.91-222, 437, முல்.133 ஆகிய பாடல்களில் பதிவாகியுள்ளன. அயம் என்ற சொல்லாட்சி அகம். 264-4, ஐங்.264-3, கலி.46-9, 53-6, நற்.257-8, 365-7 ஆகிய பாடல்களில் பதிவாகியுள்ளனா. மேற்கண்ட குறிப்புகளில் இரும்பின் நிறம் கருமை என்பதும், அது உறுதியானது என்பதும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது. (இலக்கியஇனவரைவியல்., ப.79)

**இலக்கியங்களில்பண்பாட்டுச்சூழலியல்**

இலக்கியங்களில் குறிப்பாக அறஇலக்கியங்களில் பதிவாகியுள்ள சூழலியல் சார்ந்த அறக்கருத்துக்களை விளக்க “பண்பாட்டு சூழலியல்” (Cultural Ecology) என்ற கருத்தாக்கம் பொருத்தமாக

அமையும். மனிதச் சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை விளக்குவதே பண்பாட்டுச் சூழலியலாகும். திருக்குறள் காப்பிய பண்பாட்டு அமைப்புக்கு ஏற்ப அறம், பொருள், இன்பம், வீடு இவைகளை விளக்குவதாக அமைந்துள்ளது. மேலும் அரசன் எப்படிபட்டவனாக இருக்க வேண்டும். தனிமனித ஒழுக்கம், நாடு என்றால் என்ன நட்பு என்றால் என்ன பண்பாட்டு குறித்து கூறப்பட்ட அறநூலாக விளங்குகிறது.

கம்பராமாயணம் – ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டையும், கூடா ஒழுக்கத்தின் விழைவுகளையும், சகோதரத்துவத்தையும் விளக்கும் பண்பாட்டு நூலாக விளங்குகிறது. மகாபாரதம் – ஆடையின் விழைவால் ஏற்படும் நாசத்தையும் பெண்களை மானபங்கம் செய்தால் விழையும் தீமைகளையும் எடுத்துக் கூறும் பண்பாட்டு நூலாகவிளங்குகிறது. சிலப்பதிகாரம் – தன் கணவரின் தவறுகள் பற்றி பாவை வடிவில் நிற்கும் சிலை இடம் கூட சொல்லக்கூடாது என்ற பெரியதத்துவத்தையும், குடிப்பிறப்பால் வருவதல்ல. ஒழுக்கம் என்பதை மாதவி கதாபாத்திரம் வாயிலாகவும் மனிதனும் தெய்வமாகலாம் என்ற கருத்தை கண்ணகி கதாபாத்திரத்தின் வாயிலாகவும் எடுத்து இயம்பும் பண்பாட்டு நூலாக விளங்குகிறது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் பண்பாடு குறித்த பதிவுகளுடன் தான் மிளிர்கிறது என்பதை இக்கட்டுரையின் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

[1] *பத்துப்பாட்டு மூலமும் உரையும்* - கழக வெளியீடு.

[2] *சிலப்பதிகாரம்* - மாணிக்கவாசகன் உரை.

[3] *கம்பராமாயணம்* – கம்பர்.

[4] *மகாபாரதம்.*

[5] *திருக்குறள்* - திருவள்ளுவர் - மு.வ உரை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.